19.12.2024, MCOP.No.1396/2021, P.W.1- செட்டி பெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சம்பந்தாக தருவைகுளம் காவல்நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் லாரி ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்தார்கள். முதல் தகவல் அறிக்கையை தவிர மற்ற குற்றவியல் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை தருவைகுளம் கிழக்கு கடற்கரை சாலை என்றால் சரிதான். விபத்து நடந்தது சாலையின் மையப்பகுதி என்றால் சரியல்ல. ரோட்டின் ஓரம் ஆகும். நிருபண வாக்குமூலத்தில் மோட்டார் சைக்கிள் நடு ரோட்டில் சரிந்து விழுந்ததாக கூறியுள்ளேன் என்றும், அதனால் இருவரும் சாலையில் விழுந்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை. விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை தவிர மற்ற காவல் துறை அறிக்கைகள் என்னுடைய வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் சைக்கிளை என் மூத்த மகன் மணியரசன் ஓட்டி சென்றார். அவர் தற்போது காந்திபுரத்தில் இருக்கிறார். அவருக்கு விபத்து பற்றிய விபரங்கள் தெரியும். மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்த காயத்தினால் தான் என் மகனுக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் லாரி ஓட்டுனர் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்றால் சரியல்ல. லாரி மோட்டார் சைக்கிளில் மோதவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி இறந்து சுமார் 12 வருடங்கள் ஆகிறது. எனக்கு மொத்தம் 5 குழந்தைகள். இரண்டு பெண் குழந்தைகள். 3 ஆண் குழந்தைகள். நான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன். என் மகனின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன இளவர் ஆறுமுகத்திற்கு நான் வாரிசு இல்லை என்றால் சரியல்ல. வாரிசு விபரங்களை மறைத்து பொய்யான காரணங்களை கூறி நான் மனு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மணியரசனுக்கு விபத்து சமயத்தில் 25 வயது இருக்கும்.

1, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.